# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 31/2025**

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜகோபால் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 8th August 2025.

எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் 2023ம் வருடம் சமயபுரம் மாரியம்மன் கோவில் அருகே குடியிருந்தேன். தற்போது ஈரோடு சாஸ்திரி நகரில் குடியிருந்து வருகிறேன். 2023ம் வருடம் ஸ்ரீ ஜெயசக்தி டிரேடர்ஸ் HP பெட்ரோல் பங்கில் கேசியராக வேலை செய்தேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். 01.02.2023ம் தேதி பெட்ரோல் பங்கில் வேலை முடிந்து காலை 10.00 மணிக்கு வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் மதியம் 1.00 மணிக்கு வேலைக்கு வந்தேன். அப்போது எங்கள் பெட்ரோல் பங்கில் முந்தைய தினம் இரவில் 2 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து அரிவாளை காட்டி பணத்தை மனோகரனிடமிருந்து பறித்து சென்றததாக எனது ஓனர் செந்தில்குமாரும் சொன்னார்.

2. மதியம் 3.00 மணியளவில் போலீஸார் எங்களது பெட்ரோல் பங்கிற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், வினோத்குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியன்று பெட்ரோல் பங்கில் CCTV கேமரா இருந்ததா என்றால் இருந்தது. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து போலீஸார் தயார் செய்த ஆவணத்தில் கையெழுத்து போட்டுவிட்டு பெட்ரோல் பங்கில் என் முன்னிலையில் தயார் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் நான் சொன்னபடி சொன்ன தேதியில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி ஒம்/– ராஜகோபால்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்